# வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

விவசாயிகள் தங்களது விளைபொருட்களை நியாயமான விலையில் சந்தைப்படுத்தவும் உரிய ஆதாய விலையினைப் பெற உறுதிப்படுத்துவதும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் முதன்மையான நோக்கம் ஆகும். இந்நோக்கத்தை அ□ய வேளாண்விற்பனைத்துறை மூலம் கீழ்கண்□ திட்□ங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1. தேனி விற்பனைக்குழு, தேனி.

தேனி விற்பனைக்குழு 04.01.2003 முதல் தேனியை தலைமையி□மாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாடு வோளண் விளைப்பொருள்கள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்□ம் 1987 மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வதி 1991 ஆகியவைகளில் கண்டுள்ள சட்□ விதிகளுக்குட்பட்டு ஒவ்வொரு மாவட்□த்திலும் ஒரு விற்பனைக்குழு அமைக்கப்பட்டு அவைகளை வேளாண்மை மற்றும் வேளாண் வணிகத்துறை நிர்வகித்து வருகிறது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூ□ம்.

தேனி விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் தேனி கம்பம், சின்னமனூர், போடிநாயக்கனூர், பெரியகுளம், ஆண்டிபட்டி (இ) தங்கம்மாள்புரம் மற்றும் உத்தமபாளையம் ஆகிய ஏழு இ□ங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூ□ங்கள் செயல்பட்டு வருகின்றன. ஐந்து ஒழுங்குமுறை விற்பனை கூ□ங்கள் சொந்த கட்டி□ங்களிலும் உத்தமபாளையம் (ம) பெரியகுளம் விற்பனை கூ□ங்கள் வா□கை கட்டி□த்திலும் செயல்பட்டு வருகின்றன. கீழ்கண்□ பலன்களை விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் தேனி வேளாண் விற்பனை குழு வழங்கி வருகிறது.

அ)உழவர் நலநிதித் திட்டம்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் ஒரு மெட்ரிக் டன்னுக்கு குறையாமல் மூன்றாண்டுகளுக்கு தொடர்ச்சியாக விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு ரூ.ஒரு லட்சத்திற்கான காப்பீட்டு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

ஆ). பொருளீட்டுக்கடன் திட்டம்.

விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விளைபொருட்கள் இருப்பு வைத்தால் விளைபொருடள் மதிப்பில் 75மூ வரை பொருளீட்டுக்கடன் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ரூ.மூன்று லட்சமும், வியாபாரிகளுக்கு அதிகபட்சமாக ரூ. இரண்டு லட்சமும் கடனாக வழங்கப்படுகிறது.

## பொருளீட்டுக்கடன் வழங்கிய விபரம்

(01.04.2014 முதல் 28.02.2018 வரை)

| வ:எண் | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் | மொத்த பொருளீட்டுக்கடன் லட்சத்தில் | | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | விவசாயிகள் | வியாபாரிகள் | விவசாயிகள் | வியாபாரிகள் |
| 1. | தேனி | 142.210 | 39.950 | 93 | 38 |
| 2. | கம்பம் | 6.800 | 14.000 | 7 | 14 |
| 3. | சின்னமனூர் | 34.930 | ---- | 18 | ---- |
| 4. | போடிநாயக்கனூர் | 65.710 | 7.300 | 45 | 8 |
| 5. | ஆண்டிபட்டி. | ---- | ---- | ---- | ---- |
| 6. | பெரியகுளம் | ---- | ---- | ---- | ---- |
| 7. | உத்தமபாளையம். | ---- | ---- | ---- | ---- |
| மொத்தம். | | 249.650 | 61.250 | 163 | 60 |

**இ) உலர்கள வசதி.**

**விவசாயிகள் விளைபொருட்களை உலர வைத்து தானியம் பிரித்தெடுக்க வசதியாக 20*20மீ அளவில் இதுவரை 9 உலர்களங்கள் ரூ.2.5 லட்சம் மதிப்பீட்டில் கிராமங்களில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.**

ஈ) ஒழுங்குமுறை விற்பனை கூ ங்களில் உள்ள சேமிப்பு திட் ங்கள் வசதிகள்.

தேனி விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் தேனி கம்பம் சின்னமனூர், போடிநாயக்கனூர் மற்றும் ஆண்டிபட்டி இ தங்கம்மாள்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட் ங்களில் சேமிப்பு திட் ங்களில் கட் ப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

| வ.எண். | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர்கள் | ஊரக கிடடங்கி | | நவீன கிட்டங்கி | | மொத்த கொள்ளளவு (மெ.டன்) |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்) | எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்) | |
| 1. | தேனி | 3 | 1500 | 1 | 2000 | 3500 |
| 2. | கம்பம் | 1 | 500 | 2 | 4000 | 4500 |
| 3. | சின்னமனூர் | 0 | 0 | 1 | 2000 | 2000 |
| 4. | போடிநாயக்கனூர் | 1 | 500 | 1 | 2000 | 2500 |
| 5. | ஆண்டிபட்டி. | 2 | 1000 | 0 | 0 | 1000 |
| | மொத்தம் | **7** | **3500** | **5** | **10000** | **13500** |

மேற்கண் இ ங்களில் ∴ விவசாயிகள் ∴ வியாபாரிகள் தங்கள் விளை பொருட்களை வா கைக்கோ ∴ பொருளீட்டுக்க ன் பெறவோ இருப்பு வைக்கப்பட்டு வருகிறது. விளை பொருட்களை 180 நாட்களுக்கு மட்டும் இருப்பு வைக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

உ) ஒழுங்குமறை விற்பனை கூ ங்களில் உள்ள குளிர்பதன கிட் ங்கி வசதிகள்.

**தேனி விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் தேனி கம்பம் மற்றும் சின்னமனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் குளிர்பதன் கிட்டங்கிகள் கட்டுப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.**

| வ.எண் | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர்கள் | குளிர்பதனக் கிட்டங்கி | | | | மொத்த கொள்ளளவு (மெ.டன்) |
|---|---|---|---|---|---|---|
| | | 5 மெ.டன் | 25 மெ.டன் | 50 மெ.டன் | 100 மெ.டன் | |
| 1 | தேனி | --- | 1 | --- | --- | 25 |
| 2 | கம்பம் | --- | 1 | --- | 1 | 525 |
| 3 | சின்னமனூர் | 1 | --- | 1 | --- | 55 |
| | **மொத்தம்** | **1** | **2** | **1** | **1** | **605** |

மேற்கண்ட குளிர்பதன கிட்டங்கிகள் விவசாயிகள் குழுவிற்கு மாத வாடகை அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

**ஊ) மின்னனு தேசிய வேளாண் சந்தை (e-NAM):**

இந்திய முழுவதும் ஒரே வணிகம், ஒரே உரிமம், ஒரே வணிகம், ஒரே வணிக சந்தை என்ற நோக்கில் தேசிய வர்த்தக சந்தையில் 585 வேளாண் மிண்ணனு சந்ததைகளை மின்னனு முறையில் தேசிய அளவில் மார்ச் 2018 க்குள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் மன்னனு தேசிய வேளாண் சந்தை (e-NAM) துவங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 15 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தேனி மாவட்டத்தில் கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மின்னனு தேசிய வேளாண் சந்தை (e-NAM)யுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாடெங்கிலும் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மின்னனு வர்த்தகத்தில் ஒருங்கிணைப்பதன் மூலம் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த வேளாண் விளைபொருட்களை அதிகபட்ச சந்தை விலைக்கு விற்பனை செய்யவும், வியாபாரிகள் விளைபொருட்களின் தரத்திற்கு ஏற்றார்போல் விலை நிர்ணயம் செய்து வாங்கும் வகையில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 2. உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்

விவசாயிகள் குழுக்களாக செயல்பட்டு விளைபொருளை விற்பனை செய்ய ஏதுவாக விளைபொருள்குழுக்கள் அமைத்து அக்குழுக்களுடன் வணிகர்கள் பரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் பாலசமுத்திரம், கண்டமனூர், பத்ரகாளிபுரம், போ.அம்மாபட்டி, எரணம்பட்டி, கோடாங்கிபட்டி, ஊஞ்சாம்பட்டி, மொட்டனூத்து மற்றும் கோத்தலூத்து ஆகிய கிராமங்களில் 9 உலர்களங்கள் கட்டப்பட்டுள்ளன. பாலசமுத்திரம், பத்ரகாளிபுரம், ஓடைப்பட்டி ஆகிய கிராமங்களில் 3 விளைபொருள் சேகரிப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. தேனி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் வேளாண் வணிக மையம் அமைக்கப்பட்டுள்ளது. போ.அம்மாபட்டி மற்றும் தோப்புப்பட்டி மற்றும் ஆகிய இரு கிராமங்களில் விளைபொருள் சேமிப்பு கிட்டங்கிகள் கட்டப்பட்டு, மேற்கண்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் செயல்பாட்டில் உள்ளது.

3. அக்மார்க் தரம் பிரிப்பு:

அக்மார்க் திட்டம் விருப்ப அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டமாகும். மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் மூலம் விற்பனை மற்றும் ஆய்வுத் துறை சார்பாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வேளாண் விளைபொருள் (தரம்பிரிப்பு மற்றும் விற்பனை) ஆணை 1937ன் படி செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் நுகர்வோருக்கு கலப்படமற்ற பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதே முக்கிய நோக்கமாகும். தேனி நகரில் அக்மார்க் தர ஆய்வகம் செயல்படுகிறது. இதன்மூலம் 11 வணிகர்கள் அக்மார்க் தரச்சான்று பெற்று விற்பனை செய்து வருகின்றனர்.

4. **விளைபொருள் விலைவிவரம் தெரிவித்தல்:**

விளைபொருள்களின் சந்தை விலையை அவ்வப்போது விவசாயிகள் அறிந்து கொள்ள வசதியாகவும், விளைபொருள் விலை விவரம் முன்னறிவிப்புச் செய்யவும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் DEMIC திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது. 3 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, பருத்தி மற்றும் தேங்காய் ஆகிய விளைபொருள்களின் விற்பனை விலையை உடனுக்குடன் அறிய மின் அறிவிப்புப்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளது. உழவர் சந்தை விலை விவரம் செய்தித் தாள்களில் வெளியிடப்படுகிறது.

5. **தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர அழுகும் பொருட்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்**

:

தேனி மாவட்டத்தில் அரசாணை எண்:169 வேளாண்மை (WDI) துறை நாள்: 21.06.2016-ன்படி தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர அழுகும் பொருட்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் காய்கறிகள் மற்றும் பழங்கள் 34300 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பலகோடி மதிப்பிலான அவை பல நேரங்களில் விற்பனை செய்யப்படாமல் அழுகுவதால் விவசாயிகள் அதிகளவில் நஷ்டமடைந்து பாதிக்கப்படுகிறார்கள்.

இதனை கருத்தில் கொண்டு காய்கறிகள் மற்றும் பழங்கள் பதப்படுத்த குளிரூட்டும் அறைகள், தரம்பிரிக்கும் அறைகள், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய மதிப்பு கிடைக்க ஏலம் விடும் மையம், விவசாயிகளுக்கு ஓய்வறை, வணிக தொடர்புகளை ஏற்படுத்தும் அறை உள்ளிட்ட வசதிகள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு 10 முதல் 15 சதவீதம் வரை இடைத்தரகர்களுக்கு கமிஷன் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படாது.

இந்த விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தேனி, சின்னமனூர், கம்பம் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் முதன்மை பதனிடும் மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மையங்களை சுற்றியுள்ள காய்கறி மற்றும் பழங்கள் சாகுபடி செய்யப்படும் 21 இடங்களில் தற்காலிக சேகரிப்பு மையங்களாக செயல்பட உள்ளன. 21 சேகரிப்பு மையங்களுக்கு அந்தந்த சேகரிப்பு மையங்களை சுற்றிலும் உள்ள 74 கிராமங்களில் இருந்து பழங்கள், காய்கறிகள் வரப்பெற்று, சேகரிப்பு மையங்களில் இருந்து வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் வாகனங்களில் முதன்மை பதனிடும் மையங்களுக்கு காய்கறிகள் மற்றும் பழங்கள் தரம் வாரியாக பிரிக்கப்பட்டு, இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வழிவகை செய்யப்பட இருக்கிறது. மேலும், குளிர்பதன கிட்டங்கிகள் முதன்மை பதனிடும் மையங்களில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. விவசாயிகளுக்கு நேரடியாக வங்கிக் கணக்கில் விற்பனைக்கான தொகை வரவு வைக்கப்படும், சேகரப்பு மையங்களில் இருந்து காய்கறிகளை முதன்மை பதனிடும் மையங்களுக்கு எடுத்து வரவும், முதன்மை பதனிடும் மையங்களில் காய்கறிகளை தரம்பிரித்தல், சிப்பம் கட்டுதல் போன்ற செயல்பாடுகளை கவனிக்க உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் / கூட்டுறவ நிறுவனங்கள் சுய உதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட உள்ளன.

தற்போது தேனி, சின்னமனூர் மற்றும் கம்பம் ஆகிய 3 முதன்மைப் பதனிடும் மையங்களில் ரூ..5.40 கோடி மதிப்பிலான அடிப்படைக் கட்டுமானப்பணிகள் நடந்து கொண்டு வருகின்றன.

**6. தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் - II**

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் - II கீழ் சுருளியாறு மற்றும் வராக நதி உபவடி நிலப் பகுதிகளில் 2 உழவர் உற்பத்தியாளர் நிறவனங்கள் ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ..339.31 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் ரூ.42.00 இலட்சங்கள் ஏற்கனவே செயல்முறையில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வளர்ச்சிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. கூட்டுப் பண்ணையத் திட்டம்:**

கூட்டுப் பண்ணையத் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறையின் மூலம் 100 உழவர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் 20 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் தோட்டக்கலைத் துறையின் மூலம் 55 உழவர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் 11 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் 7-10 உழவர் உற்பத்தியாளர் குழுக்களை ஒன்றினைத்து தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் நிதி உதவி பெறப்பட்டு 3 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக அமைக்கப்பட உள்ளன.

**8. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் :**

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2017-2018 நிதியாண்டிலிருந்து 2021-22 நிதியாண்டு வரையிலான ஐந்தாண்டுகளுக்கு 90 உலர்களங்கள் அமைப்பதற்கும், பிளாஸ்டிக் பெட்டிகள், தார்பாய் வழங்குவதற்கும் அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**9. சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம் :**

சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேனி மாவடடத்திற்கு ரூ.151.325 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியல் இருந்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் சூரிய ஒளி மின் சக்தியில் இயங்கும் நடமாடும் விற்பனை நிலையங்கள், தார்பாலின், சேமிப்பு கிட்டங்கிகள், பிளாஸ்டிக் கூடைகள் வழங்கப்பட் உள்ளது. மேலும் விவசாயிகளுக்கு வேளாண் வணிகம் தொடர்பான பயிற்சிகள், பட்டறிவு பயணங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அக்மார்க் கண்காட்சி மாதிரி அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது.

10. **பெரு உணவு பூங்கா**

தேனி மாவட்டத்தில் பெரு உணவு பூங்கா அமைக்க ஏதுவாக உப்பார்பட்டி, தப்புக்குண்டு இடத்திலும், சிப்காட் - புலிக்குத்தி ஆகிய இரு இடங்களில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஒன்றினை தேர்வு செய்ய வேளாண்மை விற்பனை (ம) வேளாண் வணிகத்துறை ஆணையர் சென்னை அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக விவரங்கள் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

**11. உழவர்சந்தை** :

காய்கறி மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் விளைபொருளை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்து பயன்பெறுவதற்காக உழவர் சந்தைகள் 1999-2000 ஆண்டு முதல் வருகின்றன. தேனி மாவட்டத்தில் தேனி, கம்பம், சின்னமனூர், தேவாரம், போடிநாயக்கனூர், பெரியகுளம், ஆண்டிபட்டி ஆகிய 7 இடங்களில் செயல்பட்டுவருகின்றன.

01.04.2016 முதல் 28.02.2018 வரை

| வ.எண் | உழவர் சந்தைகளின் பெயர்கள் | வரத்து(மெ.டன் | மதிப்பு | விவசாயிகளின் எண்ணிக்கை | நுகர்வோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1.. | தேனி | 30.21 | 7.51 | 72 | 4381 |
| 2. | கம்பம் | 39.17 | 9.42 | 98 | 5840 |
| 3. | பெரியகுளம் | 6.05 | 1.18 | 10 | 1105 |
| 4. | போடிநாயக்கனூர் | 6.93 | 1.51 | 12 | 1251 |
| 5. | ஆண்டிபட்டி | 5.42 | 1.33 | 11 | 778 |
| 6. | சின்னமனூர் | 15.72 | 3.62 | 23 | 2331 |
| 7 | தேவாரம் | 5.29 | 0.86 | 11 | 756 |